IndianOil

மார்க்கெட்டிங் பிரிவு                                                    தமிழ்நாடு மாநில அலுவலகம்

## இந்தியன்ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெடிற்கு
## தமிழ்நாடு மாநிலத்தில் சில்லறை விற்பனை மையங்களுக்காக
## (பெட்ரோல்/டீசல் பம்ப்கள்) நிலம் தேவை

### இந்த விளம்பரம் நிலத்தை வாங்குதல்/குத்தகைக்கு விடுதலுக்கு மட்டுமேயன்றி டீலர்ஷிப்-ஐ நியமிப்பதற்கு அல்ல

இந்த விளம்பரம் வெளியான தேதிக்கு முன்னர் சட்டரீதியான மற்றும் தெளிவான விற்பனைக்கான உரிமையுள்ள நிலத்தைக் கொண்டுள்ள விருப்பமுள்ள நபர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் 52 அமைவிடங்களில் சில்லறை விற்பனை மையங்களை அமைப்பதற்காக இந்தியன்ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட்டுக்கு உடனடியாக முழுவிற்பனை செய்ய /குத்தகையின் பேரில் (குறைந்தபட்சம் 19 ஆண்டுகள் 11 மாதங்கள் புதுப்பிக்கும் தேர்வுடன்) நிலத்தை வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் (அ) தொழில்நுட்பப் புள்ளி மற்றும் (ஆ) நிதிப்புள்ளி என இரு வகை ஒப்பந்தப்புள்ளி முறையில் வரவேற்கப்படுகின்றன.

**கீழ்க்கண்டவற்றை கவனத்தில் கொள்ளவும் :**

1. இந்த விளம்பரம் பொருந்தக்கூடிய நிலத்தை உடனடி முழு விற்பனை / குத்தகை என்ற விதத்தில் வாங்குவதற்காக வெளியிடப் படுகின்றதேயன்றி சில்லறை விற்பனை மைய டீலர்ஷிப்-ஐ நியமிப்பதற்கோ அல்லது சில்லறை விற்பனை மையத்தை செயல்படுத்துவதில் பார்ட்னர்ஷிப் என்ற வகையிலோ அல்லது கமிஷன் பேரிலோ என வேறு எந்த பலனைக் கருத்தில் கொண்டு அவரது நிலத்தின் உரிமையை அளிப்பதற்கோ / வேறு எவருக்கும் உரிமத்தை ஏற்படுத்தவோ இல்லை என்பதைக் குறித்துக் கொள்ளவும். ஏனெனில், இந்த சில்லறை விற்பனை மையங்கள் கார்ப்பரேஷனாலேயே பிரத்தியேகமாக இயக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இருப்பினும், கார்ப்பரேஷனுக்கு அதன் சுயமுடிவிற்குட்பட்டு COCOலிருந்து டீலர்ஷிப் அடிப்படையில் சில்லறை விற்பனை மைய செயல்பாடுகளை மாற்றும் உரிமை உள்ளது.
2. இவ்விதம் விற்பனை / குத்தகை பேரில் வழங்கப்பட்ட மனையானது ஓவர்ஹெட் உயர்அழுத்த மின்கம்பிகள், தயாரிப்பு / குடிநீர் பைப்லைன்கள் / கால்வாய்கள் / வடிகால்கள் / நுல்லாக்கள் / பொதுசாலை / ரயில்வே இருப்புப் பாதைகள் ஆகியவை இல்லாமல் இருக்கவேண்டும்.
3. வழங்கப்படும் மனையானது அனைத்து வில்லங்கங்கள் / அத்துமீறல்கள் / சமயம் சார்ந்த கட்டடங்கள் போன்றவை இல்லாது இருத்தல் வேண்டும். இதற்கான போதிய ஆவண நிரூபணங்கள் வழக்குரைஞரால் சான்றுரைக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து வழங்கப்பட வேண்டும்.
4. வழங்கப்பட்ட மனையின் முற்பகுதியானது நெடுஞ்சாலை / பிரதான சாலை ஆகியவற்றிற்கு பக்கத்தில் இருக்கவேண்டும். பிரதான சாலையிலிருந்து ஓர் அணுகுசாலை மூலமாக மனையானது இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளிதாரர் அவரது நிலத்தின் மனைப்பகுதியானது MORTH / NHAI ஆகியவற்றிற்கு இணங்குமாறு இருப்பதை உறுதி செய்யவேண்டும்.
6. மாநகர வரம்புக்குட்பட்ட / நகர வரம்புக்குட்பட்ட சிறிய அளவு பரிமாணங்கள் கொண்ட மனைகளும் அவை சில்லறை விற்பனை மையம் அமைக்க உகந்த தாக இருக்கும் பட்சத்தில் பரிசீலிக்கப்படும்.
7. அனைத்து அமைவிடங்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மனைகளை , அவற்றில் ஒவ்வொரு இடமும் விற்பனை விதிகளுக்கு ஏற்றதாகவும் சாத்தியக்கூறு உள்ளதாகவும் அந்த இடங்களின் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் சார்ந்து உகந்த தாக இருக்கும் பட்சத்தில் பரிசீலித்து பெற்றிட ஐஙூஇஃ க்கு உரிமை உண்டு.
8. நகர்ப்புற நில உச்சவரம்பு , விவசாயம் சாராத தேவைக்கு மாற்றுதல் , வருமான வரி தீர்வை, வில்லங்கம் இல்லா சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து சட்டப்பூர் தீர்வைகளுக்கான உரிய ஏற்பாடுகளை ஒப்பந்தப்புள்ளியாளர் மேற்கொள்ள வேண்டும்.
9. விவசாய நிலத்தை வழங்குபவர்கள் , அதனை விவசாயம் சாராத நிலப் பயன்பாட்டிற்கு ஏற்றாற் போல் மாற்றியளிக்க வேண்டும் . அதாவது , அதனை குறிப்பாக , சில்லறை விற்பனை மையம் /கட்டுமான வசதிகள் மற்றும் தொடர்புடைய பயன்பாடுகளுக்கு ஏற்றதாக தங்கள் சொந்த செலவில் மாற்றி யளிக்க வேண்டும்
10. இந்தியன் ஆயில் நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி ஒப்பந்தப்புள்ளியின் வர்த்தக மதிப்பீட்டிற்கு கீழ்க்கண்ட கூடுதல் செலவுகளும் பரிசீலிக்கப்படும்.

    i. நிலத்தை சீரமைத்தல் / பலப்படுத்துதல் / வெட்டுதல், சுவர் / ஹ்யூம் பைப்கள் போன்றவற்றை தக்கவைக்கும் செலவு உட்பட மனையை சாலை மட்டத்திற்கு சரிசமமாக கொண்டு வந்து நுழைவுக்கான / வெளியேறுவதற்கான வழிகளை ஏற்படுத்தி தருதல்

    ii. தொலைபேசி / மின்சார இணைப்புகள் போன்றவற்றை மாற்றியளித்தல் / பதித்தல் போன்ற பணிகளின் செலவுகள்.

11. விற்பனை பத்திரத்தை செயல்படுத்தும் தருணத்தில் /பத்திரப் பதிவு தருணத்தில், குத்தகையாக இருந்தால் மாத வாடகை செலுத்துதல்) பேமென்ட், காசோலை / NEFT மூலமாக செலுத்தப்படும்.
12. நிலப்பரப்பு முழுவதுமே ஒரு நபருக்கு உரிமையாக இல்லாது பல நபர்கள் அதற்கு உரிமையாளர்களாக இருக்கும் பட்சத்தில் எங்களது தேவைகளுக்கு இணங்கும் விதத்தில் நிலத்தை அடுத்தடுத்து கொண்டிருக்கும் நபர்கள் ஒரு பதிவுபெற்ற அங்கீகாரம் பெற்ற நபரின் செயலுரிமை ஆவணம் மூலம் ஒப்பந்தப்புள்ளியை அளிக்கலாம். இருப்பினும், இந்தியன்ஆயில் கார்ப்பரேஷன் அந்த அங்கீகாரம் உள்ள நபருடன் மட்டுமே நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஒவ்வொரு உரிமையாளரும் தக்க முறையில் அத்தாட்சி அளித்த அங்கீகாரமுள்ள நபருக்கான செயலுரிமை ஆவண நகலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்தளிக்கவேண்டும்.
13. ஒரே அமைவிடத்திற்கான அல்லது பன்முக அமைவிடங்களுக்கான ஒரே அல்லது பல மையங்களுக்கு ஒரு விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கலாம்.
14. தரகர்கள் / சொத்து விற்பனை முகவர்கள் விண்ணப்பிக்கவேண்டாம்.
15. இந்த விளம்பரத்திற்கு மாவட்ட அதிகாரிகளும் மற்றும் இதர அரசு அமைப்புகளும் விண்ணப்பிக்கலாம். பொருந்தக்கூடிய வகையில் இருந்தால் அரசு நிலத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
16. தெளிவான விற்பனைக்கு உகந்த பத்திரம் உடைய அரசு / பகுதியான அரசு அமைப்புகள் / தனியார் நிறுவனங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள், தனிப்பட்ட உரிம நிறுவனங்கள், கல்வி அறக்கட்டளைகளும் விண்ணப்பிக்கலாம்.
17. வழங்கப்படும் நிலத்தின் மனையானது சாலைமட்டத்துடன் ஏறக்குறைய சீராக இருந்தால் சிறந்தது.
18. அஞ்சல் / ஃபேக்ஸ் மூலம் ஆவணங்கள் பெறப்படுவதால் ஏற்படும் தாமதத்திற்கோ அல்லது அவை தொலைந்து போனாலோ அல்லது ஆவணங்கள் கிடைக்கப் பெறாவிட்டாலோ இந்தியன்ஆயில் பொறுப்பேற்காது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் இசைவு குறிப்புகள் மட்டுமே. இவை எந்தவிதத்திலும் இந்தியன்ஆயிலை பிணைக்காது.
19. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் இசைவு குறிப்புகள் மட்டுமே. இவை எந்தவிதத்திலும் இந்தியன் ஆயிலை பிணைக்காது.
20. எந்தவித காரணமுமின்றி எந்த ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கும் உரிமை இந்தியன்ஆயிலுக்கு உண்டு.
21. சொத்துக்கு இணை உரிமையாளர்கள் இருக்கும்பட்சத்தில் அனைத்து தனிப்பட்ட உரிமையாளரும் / உரிமையாளர்களும் விண்ணபத்தில் ஒப்பமிட வேண்டும். அல்லது ஒரு உரிமையாளர் விண்ணபத்தில் ஒப்பமிட அனைத்து உரிமையாளர்களும் சட்டபூர்வமான உறுதிமொழிப் பத்திரத்தை அவர் பெயரில் அளித்திருக்க வேண்டும்.
22. ஏதேனும் வழக்கு எழுந்தால் இந்த விளம்பரத்தின் ஆங்கில பதிப்பே இறுதியானதாகும்.
23. ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விதத்தில் இரு ஒப்பந்தப்புள்ளி முறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**(A) தொழில்நுட்ப புள்ளி:**

வழங்கப்படும் நிலத்தின் மனைப்பகுதியின் விபரங்கள் ஆவணத்தின் நகல்களுடன் முறையாக ஒப்பமிடப்பட்டு கீழ்க்கண்ட விபரங்களுடன் சமர்ப்பிக்கப்படவேண்டும். தொழில்நுட்ப புள்ளி நிலத்தின் உத்தேச விலை / நிலத்தின் குறிப்பு விலை போன்றவற்றை கொண்டிருக்கக் கூடாது. ஒப்பந்தப்புள்ளிதாரர் கீழ்க்கண்ட விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

- நிலத்தின் உரிமையாளரின் பெயர்
- சொத்தின் விபரங்கள் மற்றும் மனையின் அமைவிடம் குறித்த முக்கிய வரைபடம்
- மனையின் நீள அகல அளவுகள் உட்பட்ட விற்பனை / குத்தகைகளுக்கான பரப்பு பகுதி
- நிலத்தின் உரிமையாளரின் உரிமையை வெளிப்படுத்தும் பத்திரம். அதாவது விக்கிரயப் பத்திரம் முறையாக சட்டபூர்வமாக சான்றுரைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- அங்கீகாரம் பெற்ற நபருக்கான பதிவுபெற்ற செயலுரிமை ஆவணத்தின் நகலை வழங்க வேண்டும்.

மேற்கண்ட ஆவணங்கள் / விபரங்கள் இன்றி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு : தொழில்நுட்ப புள்ளி தனியாக ஓர் உறைக்குள் வைக்கப்பட்டு 'தொழில்நுட்பப்புள்ளி' என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.**

**(B) 'நிதிப்புள்ளி'** : நிதிப்புள்ளியானது கீழ்க்கண்ட விபரங்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் :

- இந்த ஒப்பந்தப்புள்ளியானது விற்பனைக்காகவா அல்லது குத்தகைக்காகவா அல்லது விற்பனை அல்லது குத்தகை இவ்விரண்டில் ஒன்றுக்காகவா என்பது தெளிவாக இருக்க வேண்டும்.
- விற்பனைக்கு எனில் எதிர்பார்க்கும் விற்பனை மதிப்பு ரூபாயில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
- குத்தகைக்கு எனில் மாதாந்திர குத்தகைத் தொகையை ரூபாயிலும் மற்றும் குத்தகைக் காலம் ஆகியவற்றை குறிப்பிட்டிருக்க வேண்டும்.

**குறிப்பு : நிதிப்புள்ளியானது தனியாக ஓர் உறைக்குள் வைக்கப்பட்டு நிதிப்புள்ளி என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.**

இந்த இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் தனித்தனியாக மூடி முத்திரையிட்டு தொழில்நுட்ப புள்ளி நிதிப்புள்ளி என அந்தந்த உறைகளின் மீது தெளிவாக குறிப்பிட்டு, இரண்டையும் சேர்த்து மூன்றாவது உறையில் இட்டு பின் அதனை மூடி முத்திரையிட்டு ____________________ '(அமைவிடத்தின் பெயர் / மாவட்டம்) க்கான நிலத்திற்கான விண்ணப்பம்' என்பதை அதன்மீது தெளிவாக குறிப்பிட்டிருக்க வேண்டும்.

விருப்பமுள்ள நபர்கள் கெடு தேதி மற்றும் நேரத்திலோ அல்லது அதற்கு முன்னராகவோ கீழ்க்கண்ட முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| வ.எண். 1 லிருந்து 30 வரை | முதன்மை கோட்ட சில்லறை விற்பனை மேலாளர், இந்தியன்ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (MD), சென்னை கோட்ட அலுவலகம், 2வது தளம், எண்.500, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. |
| வ.எண். 31 லிருந்து 36 வரை | முதன்மை கோட்ட சில்லறை விற்பனை மேலாளர், இந்தியன்ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (MD), கோயம்புத்தூர் கோட்ட அலுவலகம், இந்தியன்ஆயில் பவன், 8/1079, அவினாசி ரோடு, கோயம்புத்தூர்-641 018 |
| வ.எண். 37 லிருந்து 41 வரை | முதன்மை கோட்ட சில்லறை விற்பனை மேலாளர், மதுரை கோட்ட அலுவலகம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (MD), எண். 2, ரேஸ் கோர்ஸ் சாலை, சொக்கிகுளம், மதுரை 625 002 |
| வ.எண். 42 லிருந்து 44 வரை | முதன்மை கோட்ட சில்லறை விற்பனை மேலாளர், சேலம் கோட்ட அலுவலகம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (MD), எண். 234, முதல் தளம், தே.நெ.7, சேலம் - பெங்களூர் பை பாஸ், கொண்டலாம்பட்டி, சேலம் - 636 010 |
| வ.எண். 45 லிருந்து 52 வரை | முதன்மை கோட்ட சில்லறை விற்பனை மேலாளர், திருச்சி கோட்ட அலுவலகம், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் (MD), 'திரிவேணி', இரண்டாம் தளம், எண். B-35, சாஸ்திரி சாலை, தில்லை நகர், திருச்சி - 620 018 |

***ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிப்பதற்கான கெடு தேதி மற்றும் நேரம் : தேதி 00.00.0000 அன்று 17.15 மணி.*** கெடுத் தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு பெறப்படும் விலைப்புள்ளிகள் (தபால் தாமதம் உட்பட) பரிசீலிக்கப்பட மாட்டாது. கெடுத் தேதியிலிருந்து 150 நாட்கள் அல்லது பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட நீட்டிக்கப்பட்ட காலம் வரை விலைப்புள்ளிகள் செல்லுபடியாகத் தக்கவையாக இருத்தல் வேண்டும். ஏதேனும் வழக்கு எழுந்தால் இந்த அறிவப்பின் ஆங்கிலப் பதிப்பே இறுதியானதாகும்.

ஏதேனும் விசாரணைகளுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மொபைல் எண்களில் தொடர்பு கொள்ளவும்

| வ.எண். | அமைவிடங்கள் | தொடர்பு எண் |
|---|---|---|
| 1 | வ.எண். 1 முதல் 30 வரை | 9820416177 |
| 2 | வ.எண். 31 முதல் 36 வரை | 9425303645 |
| 3 | வ.எண். 37 முதல் 41 வரை | 9667283456 |
| 4 | வ.எண். 42 முதல் 44 வரை | 9073687882 |
| 5 | வ.எண். 45 முதல் 52 வரை | 9443389179 |

| வ.எண். | கோட்ட அலுவலகம் | அமைவிடத்தின் பெயர் | மாவட்டம் | NH/SH/ மாநகரம்/ நகரம் (டவுன்) | முகப்பு பகுதி (மீட்டர்களில்) | மனையின் அளவு - நீள அகலங்கள் (மீட்டர்களில் ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | செங்குன்றம் முதல் தடா வரை தமிழ்நாடு பகுதிக்குள் பழைய தே. நெ. 5 (இப்பொழுது தே. நெ. 16) | திருவள்ளூர் | NH | 45 | 45 |
| 2 | சென்னை | திருத்தணி முதல் ஆந்திர பிரதேசம் எல்லை வரை - பழைய தே. நெ. 205 / புதிய தே. நெ. 716 - ன் வலது பக்கம் பகுதியில் | திருவள்ளூர் | NH | 45 | 45 |
| 3 | சென்னை | எஸ். ஆர். பி டூல்ஸ் சந்திப்பு முதல் நாவலூர் வரை பழைய மாமல்லபுரம் சாலையில் | காஞ்சிபுரம் | டவுன் | 35 | 35 |
| 4 | சென்னை | உத்தண்டி முதல் மாமல்லபுரம் வரை ECR சாலையின் வலது பக்கம் பகுதியில் | காஞ்சிபுரம் | NH | 35 | 45 |
| 5 | சென்னை | சென்னை கிறிஸ்தவ கல்லூரி முதல் பள்ளிக்கரணை வரை - வேளச்சேரி - தாம்பரம் மைய சாலையில் | காஞ்சிபுரம்/ செங்கல்பட்டு | டவுன் | 35 | 35 |
| 6 | சென்னை | வண்டலூர் முதல் கேளம்பாக்கம் வரை SH 121ல் | காஞ்சிபுரம்/ செங்கல்பட்டு | SH | 35 | 35 |
| 7 | சென்னை | சிங்கப்பெருமாள் கோயில் முதல் பெருங்களத்தூர் வரை இடது பக்கத்தில் தே. நெ. 45 ல் (ஜிஎஸ்டி சாலை) | செங்கல்பட்டு | NH | 35 | 45 |
| 8 | சென்னை | வேளச்சேரி நூறு அடி சாலை குருநானக் சாலை சந்திப்பு மற்றும் வேளச்சேரி மேம்பாலம் இடையே | சென்னை | டவுன் | 30 | 30 |
| 9 | சென்னை | வேளச்சேரி முதல் தரமணி வரை தரமணி இணைப்பு சாலையில் | சென்னை | டவுன் | 35 | 45 |
| 10 | சென்னை | 200 அடி ரேடியல் சாலை - பல்லாவரம் சந்திப்பு முதல் ஓஎம்ஆர் சந்திப்பு இடையே | காஞ்சிபுரம் | டவுன் | 35 | 35 |
| 11 | சென்னை | கும்மிடிப்பூண்டி பழைய தே. நெ. 5 /புதிய தே. நெ. 16 ல் | திருவள்ளூர் | NH | 45 | 45 |
| 12 | சென்னை | புதிய ஆவடி சாலை, கீழ்ப்பாக்கம் | சென்னை | டவுன் | 25 | 25 |
| 13 | சென்னை | சாந்தி காலனி, அண்ணா நகர் | சென்னை | டவுன் | 25 | 25 |
| 14 | சென்னை | அண்ணா நகர் | சென்னை | டவுன் | 25 | 25 |
| 15 | சென்னை | கத்திப்பாரா சந்திப்பு முதல் ஐயப்பன்தாங்கல் வரை மவுண்ட் பூந்தமல்லி சாலையில் இடது பக்கம் | சென்னை | டவுன் | 35 | 35 |
| 16 | சென்னை | உள்வட்ட சாலை - இடது பக்கம் வேளச்சேரி தாம்பரம் சாலை சந்திப்பு முதல் ஜிஎஸ்டி சாலை சந்திப்பு வரை | காஞ்சிபுரம் | டவுன் | 35 | 35 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | சென்னை | முகலிவாக்கம் | சென்னை | டவுன் | 30 | 30 |
| 18 | சென்னை | வடபழனி முதல் போரூர் வரை ஆற்காடு சாலையில் | சென்னை | டவுன் | 30 | 30 |
| 19 | சென்னை | முகப்பேர் | திருவள்ளூர் | டவுன் | 25 | 25 |
| 20 | சென்னை | மதுரவாயல் | திருவள்ளூர் | டவுன் | 35 | 35 |
| 21 | சென்னை | வேலப்பன்சாவடி | திருவள்ளூர் | டவுன் | 35 | 35 |
| 22 | சென்னை | திருவள்ளூர் நெடுஞ்சாலை SH 50 ல் இடது பக்கத்தில் திருமழிசை சந்திப்பு முதல் திருவள்ளூர் வரை | திருவள்ளூர் | SH | 45 | 45 |
| 23 | சென்னை | எம்டிஎச் சாலை பாடி சந்திப்பு முதல் திருநின்றவூர் வரை | திருவள்ளூர் | டவுன் | 25 | 25 |
| 24 | சென்னை | பூந்தமல்லி முதல் செம்பரம்பாக்கம் வரை தே. நெ. 4 ல் | திருவள்ளூர் | NH | 35 | 45 |
| 25 | சென்னை | திருமங்கலம் சந்திப்பு முதல் முகப்பேர் வரை | திருவள்ளூர் | டவுன் | 35 | 35 |
| 26 | சென்னை | நெற்குன்றம் முதல் பூந்தமல்லி வரை (தே. நெ. 4) | திருவள்ளூர் | NH | 35 | 45 |
| 27 | சென்னை | சென்னை மாநகரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி (பெருநகர சென்னை மாநகராட்சி வரம்புக்குட்பட்டதில்) | சென்னை/ திருவள்ளூர்/ காஞ்சிபுரம்/ செங்கல்பட்டு | டவுன் | 30 | 30 |
| 28 | சென்னை | சென்னை மாநகரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி(சிஎம்டிஏ வரம்புக்குட்பட்டதில்) | சென்னை/ திருவள்ளூர்/ காஞ்சிபுரம்/ செங்கல்பட்டு | டவுன் | 30 | 30 |
| 29 | சென்னை | தாம்பரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி (தாம்பரம் மாநகராட்சி வரம்புக்குட்பட்டதில்) | காஞ்சிபுரம்/ செங்கல்பட்டு | டவுன் | 30 | 30 |
| 30 | சென்னை | ஆவடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி (ஆவடி மாநகராட்சி வரம்புக்குட்பட்டதில்) | திருவள்ளூர் | டவுன் | 30 | 30 |
| 31 | கோயம்புத்தூர் | தே. நெ. 948 ல் சாய்பாபா கோயில் பேருந்து நிறுத்தம் முதல் துடியலூர் காவல் நிலையம் வரை இடது பக்கம் | கோயம்புத்தூர் | டவுன் | 30 | 30 |
| 32 | கோயம்புத்தூர் | தே. நெ. 948 ல் சாய்பாபா கோயில் பேருந்து நிறுத்தம் முதல் துடியலூர் காவல் நிலையம் வரை வலது பக்கம் | கோயம்புத்தூர் | டவுன் | 30 | 30 |
| 33 | கோயம்புத்தூர் | தே. நெ. 544 ல் (சேலத்தில் இருந்து கொச்சி) கிமீ கல் 55 முதல் 87 வரை வலது பக்கம் | ஈரோடு | NH | 45 | 45 |
| 34 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகராட்சியின் வரம்புக்குட்பட்டதில் தே.நெ. 948ல் ஜிபி மருத்துவமனை பேருந்து நிறுத்தம் முதல் ப்ரோசோன் மால் வரை இரு பக்கத்திலும் | கோயம்புத்தூர் | டவுன் | 30 | 30 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 35 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகராட்சியின் வரம்புக்குட்பட்டதில் அவினாசி சாலையில் லட்சுமி மில்ஸ் சந்திப்பு முதல் லீ மெரிடியன் ஓட்டல் வரை ஏதாவது பக்கத்தில் | கோயம்புத்தூர் | டவுன் | 30 | 30 |
| 36 | கோயம்புத்தூர் | பவானி சாலையில் ஈரோடு டவுன் ஐஓபி வட்டார அலுவலகம் முதல் ஈரோடு நகராட்சி மண்டலம் 1 அலுவலகம் வரை, ஆர்என் புதூர் அருகே | ஈரோடு | டவுன் | 30 | 30 |
| 37 | மதுரை | கிரேட் காட்டன் ரோடு சந்திப்பு முதல் அரசு பாலிடெக்னிக் கல்லூரி வரை பாளையங்கோட்டை சாலையில் | தூத்துக்குடி | SH | 35 | 35 |
| 38 | மதுரை | மதுரை மாநகர் - மாநகராட்சி வரம்புக்குட்பட்டதில் | மதுரை | டவுன் | 25 | 25 |
| 39 | மதுரை | திருநெல்வேலி டவுன் - மாநகராட்சி வரம்புக்குட்பட்டதில் | திருநெல்வேலி | டவுன் | 25 | 25 |
| 40 | மதுரை | பாளையங்கோட்டை மாநகராட்சி வரம்புக்குட்பட்டதில் - (தே. நெ. ல் இல்லை) | திருநெல்வேலி | டவுன் | 25 | 25 |
| 41 | மதுரை | சமயநல்லூர் முதல் தணிச்சியம் வரை தே. நெ. 44 ல் (இடது பக்கம்) | மதுரை | NH | 45 | 45 |
| 42 | சேலம் | சேலம் மாநகராட்சி வரம்புக்குட்பட்டதில் | சேலம் | டவுன் | 30 | 30 |
| 43 | சேலம் | ஓசூர் டவுன் | கிருஷ்ணகிரி | டவுன் | 30 | 30 |
| 44 | சேலம் | சேலம் மாநகர வரம்புக்குட்பட்டதில் தே. நெ. 44 ல் | சேலம் | டவுன் | 30 | 30 |
| 45 | திருச்சி | அரியூர் முதல் பாகூர் வரை புதிய பாண் டிச்சசரி - நாகப்பட்டினம் புறவழிச்சாரலயில் இடது பக்கம் - பாண் டிச்சசரி யூனியன் பிரசதச வரம்பிற்குள்ளாக | பாண்டிச்சேரி | NH | 45 | 45 |
| 46 | திருச்சி | அரியூர் முதல் பாகூர் வரை புதிய பாண்டிச்சேரி - நாகப்பட்டினம் புறவழிச்சாலையில் வலது பக்கம் - பாண்டிச்சேரி யூனியன் பிரதேச வரம்பிற்குள்ளாக | பாண்டிச்சேரி | NH | 45 | 45 |
| 47 | திருச்சி | பஞ்சப்பூர் முதல் நாகமங்கலம் வரை (திருச்சியில் இருந்து மதுரை செல்லும் வழியில் இடது புறம்) தேசிய நெடுஞ்சாலையில் இருந்து நேரடி இணைப்புடன் உள்ள இடம் | திருச்சி | NH | 45 | 45 |
| 48 | திருச்சி | தேசிய நெடுஞ்சாலை 132 -யில் விழுப்புரம் முதல் விக்கிரவாண்டி வரை (திருச்சியில் இருந்து சென்னை செல்லும் வழியில் இடது புறம்) | விழுப்புரம் | NH | 45 | 45 |
| 49 | திருச்சி | தேசிய நெடுஞ்சாலை 38 -யில் அரசூர் கூட்டு ரோடு லிருந்து விழுப்புரம் அருகே தேசிய நெடுஞ்சாலை 45 அ பிரிவு வரை (திருச்சியில் இருந்து சென்னை செல்லும் வழியில் இடது புறம்) | விழுப்புரம் | NH | 45 | 45 |
| 50 | திருச்சி | பாண்டிச்சேரி டவுன் - பாண்டிச்சேரி நகராட்சி வரம்பிற்குள்ளாக | பாண்டிச்சேரி | டவுன் | 30 | 30 |
| 51 | திருச்சி | பாண்டிச்சேரி டவுன் - உழவர்கரை நகராட்சி வரம்பிற்குள்ளாக | பாண்டிச்சேரி | டவுன் | 30 | 30 |
| 52 | திருச்சி | திருச்சி டவுன் - மாநகராட்சி வரம்பிற்குள்ளாக | திருச்சி | டவுன் | 30 | 30 |